**வணிக வழக்குக்கான சார்பு நீதிமன்றம்,**
**ஸ்ரீ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

C.O.S.No. 88 Of 2025

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18- வது நாள் புதன்கிழமை 1969 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.சி.பி.வேதகிரி.,பி.பார்ம்.,எம்எஸ்-ஐடி(ஆஸ்திரேலியா).,எல்எல்எம்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. பார்வதி | கிராமம்: | |
| க.பெ. (அ) த.பெ. | திரு. முத்துசாமி | வேலை: | கூலிவேலை (100 நாள் வேலை வாய்ப்பு திட்டம்) |
| வயது | 58 | செல்போன் எண் | |

பி.வா.சா.1 **திருமதி. பார்வதி** ஆக 18.02.2026 அன்று ஆஜராகி

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் பிரதிவாதி. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிரூபண வாக்குமூலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவாவில் தாக்கல் செய்யப்படும் பிரமாணவாக்குமூலத்தின் அனைத்து விவரங்களை தெரிந்த கொண்டு தான் கையொப்பம் செய்தீர்கள் என்றால் ஆமாம். நீங்கள் பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்ட முகவரியில் தான் தற்போது வசித்து வருகிறீர்களா என்றால் ஆமாம். வா.சா.ஆ.1ல் உள்ள புகைப்படம் மற்றும் கையொப்பம் உங்களுடையதா என்றால் இல்லை. வாதி வங்கிக்கு நான் எந்தவித புகைப்படமும் கொடுக்கவில்லை. உங்களுக்கு எழுதப் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. கையொப்பம் செய்யத் தெரியுமா என்றால் பேர் எழுத தெரியும். கனரா வங்கி அன்னூர் கிளையில் உங்களுக்கு சேமிப்பு கணக்கு (4375119001477) மற்றும் கடன் கணக்கு ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ஒப்பந்தம் மற்றும் வா.சா.ஆ.4 (AOD) ஆகியவற்றில் உள்ள கையயொப்பம் உங்களுடையதா என்றால் என்னுடைய கையொப்பம் இல்லை. வாதி வங்கி உங்களுக்கு கடன் அளித்து சில ஆவணங்களில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல, நான் எந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை. வாதி வங்கி உங்களுக்கு ஆவணங்களின் அடிப்படையில் கடன் கொடுத்தும், உங்களிடம் தாவா கடன் தொகை கட்ட வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி வங்கி எனக்கு எந்த கடன் தொகையையும் வழங்கவில்லை. வாதி வங்கி உங்களுக்கு எந்த கடன் தொகையையும் வழங்கவில்லை, ஆவணங்கள் மோசடியாக வாதி வங்கி ஏற்படுத்தியது என்று கூறி வாதி வங்கி மீதோ அல்லது கிளைமேலாளர் மீதோ காவல் துறையிலோ அல்லது நீதிமன்றத்திலோ புகார் கொடுத்தோ அல்லது வழக்கோ தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 3ல் "எனக்கு கால்நடைகளை வாங்குவதற்காக விவசாய கடன் வழங்குவதாக கூறி பல்வேறு ஆவணங்களில் என்னிடம் இருந்து கையெழுத்து பெற்றுக் கொண்டார்" என்று கூறி இருப்பது தவறா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் ஆதார் கார்டு நகல் உங்களுடையதா, அதில் உள்ள பெயர் உங்களுடையதா என்றால் என் பெயர் தான், நான் வாதி வங்கிக்கு ஆதார் நகலை கொடுக்கவில்லை. பிரமாணவாக்குமூலம், வா.சா.ஆ.1 மற்றும் என்னிடம் காட்டப்படும் ஆதார் கார்டு நகல் ஆகியவைகளில் உள்ள முகவரி ஒரே முகவரி என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.5ன் படி வாதி வங்கி ஆன கனரா வங்கி அன்னூர் கிளையில் உங்களுக்கு ரூபாய் 5

இலட்சம் கடன் கொடுத்துள்ளதாக கண்டுள்ளது என்றால் நான் பணம் வாங்கவில்லை. கனரா வங்கி அன்னூர் கிளையில் உள்ள உங்களுடைய சேமிப்பு கணக்கில் (4375119001477) இருந்து தான் ரூபாய் 5 இலட்சம் கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கடந்த 02.11.2022ல் உங்கள் சேமிப்பு கணக்கில் இருந்து கடன் கணக்கிற்கு ரூபாய் 2,000/- செலுத்தப்பட்டதாக வா.சா.ஆ.5ல் கண்டுள்ளது என்றால் சரியல்ல. அதேபோல் கடன் கணக்கிற்கு ரூபாய் 6,000/- ரொக்கமாக கடந்த 23.02.2023ல் செலுத்தப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல. சமரச மையத்தில் இருந்து உங்களுக்கு தாவா சம்பந்தமாக ஏதேனும் அறிவிப்பு வந்ததா என்றால் வந்தது. அறிவிப்பு பெற்று சமரசம் மையம் சென்றீர்களா என்றால் வழக்கறிஞர் உடன் ஆஜர் ஆனேன், நீதிமன்றத்தை அணுகும்படி கூறினார்கள். கடந்த 2022 ல் இருந்த 2024 வரை ஆவணங்கள் மோசடியாக வாதி வங்கி ஏற்படுத்தியது என்று கூறி வாதி வங்கி மீதோ அல்லது கிளைமேலாளர் மீதோ காவல் துறையிலோ அல்லது நீதிமன்றத்திலோ புகார் கொடுத்தோ அல்லது வழக்கோ தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. ரூபாய் 5 இலட்சம் வாதி வங்கியிடம் கடன் பெற்றுவிட்டு திருப்பி செலுத்தக் கூடாது என்ற ஒரே நோக்கத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு அளித்த கடன் தொகை பொதுமக்களின் வரிப்பணம் ஆகும், அதை வசூல் செய்ய வாதி வங்கி கடமைப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரை உள்ள ஆவணங்களில் நீங்கள் வாதி வங்கிக்கு நேரில் சென்று கையொப்பம் செய்துள்ள ஆவணங்கள், மேற்படி ஆவணங்களில் தற்சமயம் கையொப்பம் செய்யவில்லை என பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. தாவா கடனை வாங்கிய உங்களுக்கு நிலுவைத்தொகையை கட்ட பொறுப்பும் கடமையும் உள்ளது, தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2026.02.18 18:56:26 +0530

Judge,
Commercial Court,
(Senior Civil Judge Cadre),
Coimbatore.